**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**------**

## IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, UTHANGARAI

| | | |
|---|---|---|
| Calendar | : | Sessions Case No. 58 of 2020 |
| Miscellaneous | : | |
| Preliminary register | : | |
| Sessions | : | |

| | | | |
|---|---|---|---|
| Deposition of witness for | : | Prosecution : | PW- 16 |
| | | Defence : | |
| | : | Court : | |

| | | |
|---|---|---|
| Name | : | Tmt. Vimala |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 29th day of March 2023.**

**முதல் விசாரணை எதிரிகள் ஆஜர், இருதரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்.**

நான் தற்போது ஊத்தங்கரை அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 15.12.2018 அன்று இரவு 11.00 மணி அளவில் நான் ஊத்தங்கரை அரசு மருத்துவமனையில் பணி மருத்துவராக இருந்தபொழுது முருகன் த/பெ.பெருமாள். ஆனந்தன் த/பெ.அண்ணாமலை ஆகியோர்களை மாரியப்பன் என்பவர் சிகிச்சைக்ககாக அழைத்து வந்தார். அவர்களில் முருகன் என்பவர் இரவு 10.30 மணி அளவில் வித்தியாமந்தீர் மாணவர் விடுதி அருகே இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்தபோது வேறு இருசக்கர வாகனத்தில் வந்த இரண்டு நபர்கள் துப்பாக்கியால் சுட்டதாக கூறினார். முருகன் என்பரை பரிசோதனை செய்ததில் வலது காதின் மடல் 4 x 2x 1 CM அளவில் பிய்ந்து இருந்தது. மூக்கில் 0.5 x 0.5 cm அளவில் சிராய்பு காயம் இருந்தது. அவரை மேல் சிகிச்சைக்காக தருமபுரி மருத்துவ கல்லூரி அரசு மருத்துவமனைக்கு பரிந்துரை செய்தேன். மருத்துவமனை அரசு கல்லூரியில் முருகனுக்கு சிகிச்சை அளித்துபோது வலது காதுக்கு அருகே தாடை எழும்பில் ஒரு சிறிய எழும்பு முறிவு இருந்தது கண்டறியப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் மேற்படி முதல் காயம் கொங்காயம் என்று கருத்துரை வழங்கினேன்.

அதே சம்பவத்தின் தொடர்ச்சியாக சிகிச்கைக்கு வந்திருந்த ஆனந்தன் என்பவரை பரிசோதனை செய்ததில் அவருக்கு வலது அக்குல் கீழ் பகுதியில் 1 x 1 cm அளவில் வட்ட வடிவலான துப்பாக்கியால் சுட்ட தீ காயம் இருந்தது. அவரது வலது முன் கையில் உள் பகுதியில் 1 x 1cm அளவில் கிழிந்த மாதிரியான காயம் இருந்தது. மேற்படி வலது முன் கையின் உள் பகுதியில் மேற்கூறிய காயத்திற்கு அருகே 1 x 0.5 cm அளவில் கிழிந்த காயம் இருந்தது. அதே இடத்திற்கு அருகில் 0.5 x 0.5 cm அளவில் ஒரு தீ காயம் இருந்தது. அவரை மேல் சிகிச்கைகாக தருமபுரி மருத்துவ கல்லூரி அரசு மருத்துவமனை பரிந்துரை செய்தேன். அவரை அங்கிருந்து மறுபடியும் மேல் சிகிச்சைகாக சேலம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு உள்ளார். சிகிச்சையின் முடிவில் அவருக்கு உள்ள காயங்கள் கொடுங்காயம் என்று சிகிச்சை அளிந்த மருத்துவர் சான்று வழங்கியுள்ளார். அதன் அடிப்படையில் காயம்பட்ட நபருக்கு உள்ள காயம் கொடுங்காயம் என்று கருத்துரை அளித்து காய சான்றிதழ் வழங்கினார். முருகன் என்பருக்கு விபத்து பதிவேட்டுடனான காய சான்றிதழ் அ.தா.சா.ஆ.10. ஆனந்து விபத்து பதிவேட்டுடனான காய சான்றிதழ் அ.தா.சா.ஆ.11. ஆனந்தனுக்கு உள்ள முதல் காயம் வலது பக்க விலா எழும்பிற்கு மேலே உள்ள அல்லை பகுதி ஆகும்.

கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் மருத்துவரிடம், மேற் சொன்ன நபர்களுக்கு உள்ள காயங்கள் சில நபராள் துப்பாக்கியால் சுட்டால் அக்காயங்கள் ஏற்படுவதற்கு வாய்ப்பு உள்ளதா என்றால் ( கற்றறிந்த எதிர் தரப்பு வழக்கறிஞர் இவ் வினாவை முதல் விசாரணையின் போது எழுப்பவே இயலாது என்று ஆட்சேபனை தெரிவித்தார். முதல் விசாரணையின் போது மேற்படி குறிப்பாக உணர்த்தும் வினாவை நிபுனரிடம் எழுப்பி உள்ள நிலையில் ஆட்சேபனைக்கு உட்பட்டு வினா அனுமதிக்கப்படுகிறது) வாய்ப்பு உள்ளது. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**1,2 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

சாட்சிகள் இருவரும் இரவு 11.10 மணி அளவில் சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டார்கள். உடனடியாக மேல் சிகிச்சைக்காக பரிந்துரை செய்து அனுப்பப்பட்டார்கள். சாட்சிகளுக்கு ஊசி போட்டதை தவிர வேறு எந்த

சிகிச்சை அளிக்கவில்லை. விபத்து பதிவேடு தயார் செய்தவுடன் 10 நிமிடத்தில் அனுப்பிவிட்டோம். தருமபுரி மருத்துமனையிலிருந்து முருகனுக்கு வழங்கப்பட்ட காய சான்றின் அடிப்படையில் நான் கருத்துரை வழங்கியுள்ளேன். முருகனின் வலது காதில் மடலின் மேல்பகுதியில் காயங்கள் இருந்தது. முருகனுக்கு மேற்படி மடலின் மேற்பகுதியை தவிர அதன் அருகில் எந்த காயமும் இல்லை என்றால் சரிதான். காதின் மேற்பகுதியில் காயம் ஏற்பட்டால் தாடை பகுதியில் அறுவை சிசிக்சை செய்ய அவசியம் இல்லை என்றால் சரிதான், பின்னிட்டு சிசிக்சை அளித்த மருத்துவர் கண்டறிந்து சிகிச்சை அளித்து உள்ளார். முருகனின் காது மடலில் கிழிந்த காயம் இருந்தது. காது மடலில் குண்டு பாயந்ததற்க்கான அருகுறியும் இல்லை என்றால் ஓட்டை இல்லை, குண்டுபட்டு சென்றால் ஏற்பட வாய்ப்பு உள்ளது. ஆனந்தனின் பின் பகுதியில் எவ்விதமான காயங்கள் இல்லை என்றால் சரிதான். சிகிச்சைக்கு வந்தவர்கள் இருசக்கர வாகனத்தில் சென்றதாகமட்டும் கூறியுள்ளார்கள் யார் வாகனத்தை ஓட்டி சென்றார்கள் என்று கூறவில்லை. சிகிச்சைக்கு வந்திருந்தவர்கள் ஆடைகள் அணிந்து வந்து இருந்தார்களா, இல்லையா என்றால் ஞாபகம் இல்லை. முருகனுக்கு காதின் மடலின் உள்ள காயம் இருசக்கர வாகனத்தில் தவறி விழுந்தால் ஏற்பட்ட வாய்ப்பு உள்ளது என்றால் உள்ளது. ஆவணங்களின் அடிப்படையில் காய சான்றிதழ் வழங்கி உள்ளேன் என்றாலும் காயம் பட்டவருக்கு சிகிச்சை அளிக்கவில்லை என்றால் சரிதான்.

(கற்றறிந்த 3-ம் எதிர் தரப்பு வழக்கறிஞர் மேற்படி குறுக்கு விசாரணை அம்சங்களை ஏற்று கொள்வதாக தெரிவித்தார்).

Sub

SENTHIL KUMAR RAJAVEL

Digitally signed by SENTHIL KUMAR RAJAVEL
Location: Uth